035469

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணியிடை காலமான அரசு ஊழியர் திரு. சி.செல்வராஜ் என்பவரது மகன் திரு. செ.மணிகண்டன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தட்டசராக பணி நியமனம் வழங்கப்பட்டது - அவரது பணியினை தட்டச்சர் பதவியில் 22.01.2022 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (ப) எண். 246

நாள்: 16. 12. 2022
சுபகிருது ஆண்டு
மார்கழி 1 - ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053.

ஆதி-திராவிடர் நலம் இயக்குநரகம் 21 DEC 2022 சேப்பாக்கம், சென்னை-5

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.

2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க.எண்.இ6/25067/2021, நாள்.27.06.2022.

-------

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், தஞ்சாவூர் மாவட்டம், நடுவிக்கோட்டை அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் இரவு காவலராக பணிபுரிந்து பணியிடையே 22.02.2020 அன்று மரணம் அடைந்த சி.செல்வராஜ் என்பவரது மகன் திரு.செ.மணிகண்டன் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசு விதிகளின்படி தற்காலிக தட்டச்சர் பணி நியமனம் வழங்கப்பட்டு, 22.01.2022 முற்பகல் முதல் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் தட்டச்சராகப் பணிபுரிந்து வருகிறார். என்றும், அன்னாரது தட்டச்சர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்காணும் ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு உரிய ஆவணங்களுடனும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படியும் அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

0354

3. ஆகவே, கருணை அடிப்படையில் 22.01.2022 அன்றைய தேதியில் தட்டச்சராக பணிநியமனம் வழங்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் தட்டச்சராகப் பணிபுரிந்து வரும், திரு.செ.மணிகண்டன் என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 22.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அலுவல் சாரா குறிப்பு எண்.16826/ட்டி1/2022-1, நாள்.12.10.2022 மற்றும் அலுவல் சாரா குறிப்பு . எண். 3335203/ஜி2/2022, நாள். 27.10.2022-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்:
திரு. செ.மணிகண்டன், த/பெ திரு.சி.செல்வராஜ் (late), தட்டச்சர்,
பட்டுக்கோட்டை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர் மாவட்டம்.
(ஆதிதிராவிடர் நல இயக்குநர் வழியாக)
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
தஞ்சாவூர் மாவட்டம்,
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-600 018/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-600 008.

நகல்:-
தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

மே.மு.எண். இ6/25067/2021, நாள். . 01.2022.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பெறுநர்,
திரு வீ.மணிகண்டன்,
தட்டச்சர்,
அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளி,
பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.

Personal Assistant to
Director of Adi Dravidar Welfare
Chepauk, Chennai-05.

19/12/2022

பிரிவு அலுவலர்.